2014 ஜூலை 24]

***திரு. பி.ஜி. நாராயணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீரத்திற்கு ஜான்சிராணி; வீரத்திற்கு வேலு நாச்சியார்; விவேகத்திற்கு ராணி மங்கம்மாள்; தியாகத்திற்கு தில்லையாடி வள்ளியம்மை; இசைக்கு எம்.எஸ். சுப்புலட்சுமி; மனித நேயத்திற்கு அன்னை தெரசா என்று காலத்தை வென்று மங்காப் புகழாய் காட்சிதரும் இவர்கள் எல்லோருடைய சிறப்பாற்றல்களையும், சீர்மிகு சிந்தனைகளையும் ஒருங்கே பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) நுண்மான் நுழைபுலத்தோடு நாடுபோற்றும் நல்லாட்சியை நடத்திவரும் தங்கத் தாரகை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

2013–2014 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 146 முதல் 158 வரையிலான 13 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

பிற்பகல் 12–05

(இ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன் அவர்கள். சட்டவிதிகள் ஆய்வுக் குழுத் தலைவர்.*

***திரு. ஞா. செந்தமிழன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்றும் இமயமாய், எதிலும் வெற்றியாய், மக்கள் நலன் காப்பதில் தென்றலாய், மனிதர் குல மாணிக்கமாய், நாடாளுவதில் வல்லரசும் வணங்கும் நல்லரசாய், நாடாளுமன்றத் தேர்தலிலே 40–ல் 37–ல் வெற்றியாய், பாராளுமன்றத்தில் பாரதத்தில் 3–வது மாபெரும் இயக்கமாய் உருவாக்கி, கழகத்தின் காவல் தெய்வமாய் (மேசையைத் தட்டும் ஒலி) என் அன்னையாய், ஆசானாய், தெய்வமாக விளங்குகின்ற இதய தெய்வம் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றேன்.*

2013–2014 ஆம் ஆண்டிற்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் 9, 10 மற்றும் 11–வது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.